13.10.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிப்பு



**சேலம்:** பயிர் சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு இன்று காலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் வினாடிக்கு 14 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்பட்டு வந்தது.

இந்த நிலையில், சாகுபடிப் பணிகளுக்காக நீர் திறப்பு அளவு 16 ஆயிரம் கன அடியாக இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தண்ணீர் பற்றாக்குறை: பூக்களை பயிரிட விவசாயிகள் ஆர்வம்

தண்ணீர் பற்றாக்குறையால் பூக்களை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தம்மம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான செந்தாரப்பட்டி, கூடமலை, கெங்கவல்லி, கொண்டயம்பள்ளி, மண்மலை, வாழக்கோம்பை, ஐங்கமசமுக்திரம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் தற்போது சிறுவயல்களில் கோழிக்கொண்டை, சாமந்திப்பூ போன்றவற்றை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டதால், விவசாயிகள் தாங்கள் வழக்கமாக பயிரிடும் பயிர்களை பயிரிடுவதில் சிக்கல் நிலவி வருகிறது. இதனால், வெறுமனே இருந்துவரும் வயல்களில் சாமந்தி, செண்டுமல்லி, கலர் பூ, கோழிக்கொண்டை உள்ளிட்ட பூக்கள் வகைகளை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

இதுகுறித்து பூ விவசாயிகள் கூறியது: தற்போது கோழிக்கொண்டை, செண்டுமல்லி உள்ளிட்ட பூக்கள் ஒரு கிலோ ரூ.30 முதல் 40 வரை விலைபோகிறது. அன்றாட வீட்டுச் செலவுகளுக்கு பூக்கள் மூலம் வரும் வருவாய் போதுமானதாக உள்ளது என்றனர்.

## அதிக லாபம் தரும்கூர்க்கன் கிழங்கு!



அரக்கோணம்: குறுகிய கால மருந்து பயிர்களில் மருந்து கூர்க்கன் அல்லது கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) தற்போது தமிழ்நாட்டிலும் பயிரிடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட பகுதிகளில் அதிகம் பயிரிடப்பட்ட இந்த மருந்து கூர்க்கன், தற்போது வட தமிழ்நாட்டு பகுதிகளிலும் பயிரிடப்பட்டு வருகிறது. அரக்கோணம் வட்டம், நெமிலி வட்டாரத்தில் பெரப்பேரி கிராமத்தில் பலர் மருந்து கூர்க்கனை பயிரிட்டு அதிக லாபம் பெற்று வருகின்றனர். இந்த கூர்க்கனின் வேர்க் கிழங்குகள் மருந்துப் பொருள்களாக அதிகம் பயன்படுகின்றன. வேர்கள் கேரட்டை போல் பருமனாகவும், 30 செ.மீ. வரை நீளமாகவும் இருக்கும். வேர்கள் இளமஞ்சள் நிறத்துடனும் வாசனைத் தன்மையுடனும் இருக்கும். இவற்றில் ரத்த அழுத்தத்தை சீர் செய்யப் பயன்படும் போர்ஸ்கோலின் எனும் மூலப்பொருள் உள்ளது. இது கிளக்கோமா எனும் கண்கோளாறு நோய்க்கும் மருந்தாக பயன்படுகிறது.

மருந்து கூர்க்கனில் மங்கானிபெரு, கார்மாய் எனும் இரு ரகங்கள் உள்ளன. மங்கானிபெரு கர்நாடக மாநிலம் பெல்காம் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதன் கிழங்குகள் பருமனாகவும் 30 செ.மீ. வரை நீளமாகவும் இருக்கும். தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படுவதும் மங்காணிபெரு ரகம் தான். இந்த மருந்து கூர்க்கனை செம்மண் அல்லது மணல் செம்மண் அல்லது சரளை வகை மண் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். வேரின் வளர்ச்சிக்கு மண்ணின் தன்மை கடினமாக இருக்கக் கூடாது. வடிகால் வசதி உடைய மணற்பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றவை. நீர் தேங்கும் மண் வகைகள் இதன் சாகுபடிக்கு ஏற்றதல்ல. ஆண்டுக்கு 70 செ.மீ. மழையளவு உள்ள சமவெளிப் பகுதிகள் மருந்து கூர்க்கன் சாகுபடிக்கு ஏற்றவை. தாழ்வான மலைச் சரிவுகளிலும் நன்றாக வளரும். தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதியுடன் இதை சாகுபடி செய்யலாம்.
நுனித் தண்டுகள் மூலம் கிழங்குகளை பயிர்பெருக்கம் செய்யலாம். மூன்று அல்லது நான்கு கணுக்களை உடைய 10 செ.மீ. நீளமுள்ள நுனித் தண்டுகளை மட்டுமே நடவுக்கு பயன்படுத்த வேண்டும்.

நிலத்தை உழுது ஹெக்டேருக்கு 15 டன் தொழுஎரு இட்டு மண்ணை பயன்படுத்த வேண்டும். பிறகு 60 செ.மீ. இடைவெளியில் பாக்கிகள் பிடிக்க வேண்டும். பயிர்களின் பக்கவாட்டில் தண்டுகளை ஜூன்-ஜூலை அல்லது செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் நடவு செய்ய வேண்டும். 60 செ.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்ட பாத்திகளில் 45 செ.மீ. இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய

வேண்டும். ஒரு ஹெக்டேரில் நடவு செய்ய 37,030 செடிகள் தேவைப்படும். சற்றே வளம் குறைந்த நிலங்களில் செடிகளை 30 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். இந்த முறையில் ஹெக்டேருக்கு 55,000 செடிகள் நடுவதற்கு தேவைப்படும்.

ஒரு ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச் சத்து, 60 கிலோ மணிச் சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து உரங்களை செடிகள் நட்ட 30-ஆவது நாளிலும், பிறகு 45 ஆவது நாளிலும் சமமாகப் பிரித்து இட வேண்டும். நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை உள்ள நிலங்களுக்கு ஹெக்டேருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டச் சத்து உரத்தை அடியுரமாக இடுவது அவசியம். செடிகளை நட்ட முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையும், பிறகு பத்து நாள்கள் இடைவெளியிலும் நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். கிழங்குகளை அறுவடை செய்வதற்கு 10 நாள்கள் இருக்கும்போது கடைசி பாசனத்தை நிறுத்தி விடவேண்டும்.
செடிகளை நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் கிழங்குகள் அறுவடைக்குத் தயாராகின்றன. இந்த தருணத்தில் செடிகளை தாழ் அறுத்து மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்குமாறு மண்ணைத் தோண்டி, கிழங்குகளை சேதமின்றி எடுக்க வேண்டும். இதற்கு உழவு கலப்பை கொண்டு மேலாக உழுது கிழங்குகளை சேதமின்றி எடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 15-20 டன் பச்சை வேர்கள் அல்லது 2000-2200 கிலோ உலர்ந்த வேர்கள் மகசூலாக கிடைக்கும். பச்சை கிழங்குகளை நீளவாக்காகவும், குறுக்காகவும் சிறிய துண்டுகளாக கத்திகொண்டு வெட்டி, பிறகு வெயிலில் சீராக உலர்த்த வேண்டும். வேலூர் மாவட்டம், அரக்கோணத்தை அடுத்த நெமிலிக்கு அருகே பெரப்பேரியில் பலர் தங்களது விவசாய நிலங்களில் மருந்து கூர்க்கன் பயிரை பயிரிட்டு தற்போது ஏக்கருக்கு 10 டன் மகசூல் பெற்று வருகின்றனர். இதற்கு டன்னுக்கு ரூ. 12 ஆயிரம் விலை கிடைப்பதாகவும் தெரிவிக்கும் இப்பகுதி விவசாயிகள், இப்பயிருக்கான கிழங்குகள் மற்றும் உரங்களை கிழங்குகளை பெற்றுக்கொள்ளும் நிறுவனத்தாரே அளிக்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான விவரம் தேவைப்படும் விவசாயிகள் தங்களது வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வீட்டுத் தோட்டங்களுக்கு செலவின்றி உரம் தயாரிப்பு!



கிராமப்புறங்கள் மட்டுமன்றி நகரங்களிலும் மொட்டை மாடியிலும், வீட்டின் பின்புறங்களிலும் தோட்டம் அமைத்து காய்கறிச் செடி வளர்ப்பது அதிகரித்து வருகிறது. இத்தகைய தோட்டங்களுக்கு அதிக விலை கொடுத்து உரங்கள் வாங்காமல் வீட்டுக் கழிவுகளிலிருந்தே உரம் தயாரித்து பயன்படுத்தலாம். இது,

மண் வளத்துக்கும் செடிகளுக்கும் ஆரோக்கியம் என, தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இயற்கை உர தயாரிப்பு: அன்றாட சமையலுக்குப் பயன்படுத்தும் காய்களின் தோல், கழிவுகள் போன்றவற்றையே சிறந்த உரமாக்கலாம். வெங்காயம், உருளைக்கிழங்கு தோல், பயன்படுத்த முடியாத தக்காளி, இலைக்கழிவுகள் போன்றவற்றை குப்பையில் கொட்டாமல், வீட்டின் பின்புறம் குழி தோண்டி, அதில் இவற்றைக் கொட்டி மண்ணைத் தூவினால் உரக்குழி தயார். இதேபோல் பயன்படுத்தப்பட்ட டீ தூள், முட்டை ஓடுகள், கால்நடைகளின் சாணம்கூட சிறந்த இயற்கை உரம் தயாரிக்க பயன்படுகிறது. மாடி வீட்டில் வசிப்போர் உடைந்த மண் சட்டி அல்லது பக்கெட்டில் மண் இட்டு இந்த இயற்கை உரம் தயாரிக்கலாம். இக்கழிவு நல்ல வெயில் படும்படி இருக்க வேண்டும். இப்படிச் செய்வதால் கழிவுப் பொருள்களில் உள்ள சத்து எல்லாம் ஒன்றாகி மக்கி உரமாகும். இதை உரமாக இடும்போது செடிகள் நன்றாக வளரும்; சுவையான காய்கறி கிடைக்கும்.

பூங்கா கழிவுகள்: மக்கும் இலைகள், பெரிய பூங்கா மற்றும் தோட்டங்களில் உதிர்ந்து கிடக்கும் இலை, தழைகளை சேகரித்து வீட்டுத் தோட்டத்தில் ஒரு மூலையில் குவிக்க வேண்டும். அவற்றை மக்கவைக்கும் முன்பாக சிறுசிறு துகள்களாக்க வேண்டும். இக்கழிவுகளில் இருக்கும் கரிமச்சத்து, தழைச்சத்து விகிதம்தான் மக்கும் முறையை நிர்ணயிக்கும் காரணிகள். எனவே, கரிமச்சத்து, தழைச்சத்து அதிகமுள்ள கழிவுகளை நன்கு கலக்க வேண்டும். அதாவது பச்சை, காய்ந்த கழிவுகளைச் சேர்த்து கலக்க வேண்டும். சமையலறை காய்கறிக் கழிவுகள், பழுப்புக் கழிவுகள் - வைக்கோல், காய்ந்த இலைகள், காய்ந்த புற்கள் இவ்விரண்டையும் கலந்து வைப்பதன் மூலம் குறைந்த காலத்தில் மக்கச் செய்ய முடியும்.

ஆக்ஸிஜன் அவசியம்: கம்போஸ்ட் குழிகளில் ஆக்ஸிஜன் அதிகமிருந்தால்தான் நுண்ணுயிர்களின் செயல்பாடு தூண்டப்படும். எனவே, குழியில் காற்றோட்டம் ஏற்படுத்த குழியின் பக்கவாட்டிலிருந்து அல்லது செங்குத்தான நிலையில் குழாய்களைப் பொருத்தலாம். 15 நாளுக்கு ஒருமுறை கழிவுகளைக் கிளறுவதால் கீழுள்ள கழிவுகள் மேலும், மேலுள்ள கழிவுகள் கீழும் செல்வதால், கழிவை மக்கச் செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாடு துரிதப்படும்.

ஈரப்பதம் தேவை: எந்த சூழ்நிலையிலும் கம்போஸ்ட் குழிகளில் ஈரப்பதம் குறையக்கூடாது. இல்லையெனில், நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மக்கும் தன்மை பாதிக்கப்படும்.

மக்கிய உரம் முதிர்வடைதல்: இத்தொழில்நுட்ப முறைகளில் 30 நாள்கள் கம்போஸ்ட் குழிகளில் வைக்கப்படும் இக்கழிவானது முதிர்வடையும் நிலையை எட்டும். முதிர்வடைந்த மக்கிய உரமானது, அளவு குறைந்தும், கருப்பு நிறமாகவும், துகள்களின் அளவும் குறைந்தும் காணப்படும். முதிர்வடைந்த மக்கிய உரத்தைக் கலைத்து தரையில் விரித்து, மறுநாள் 4 மி.மீ. சல்லடையால் சலித்து எடுத்துவைத்துக் கொள்ளலாம். செறிவூட்டப்பட்ட உரம் அறுவடை செய்யப்பட்ட மக்கிய உரத்தை நிழலில் கடினமான தரையில் குவித்து நுண்ணுயிர்களான அசோடோபேக்டர், சூடோமோனஸ், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா 0.02 சதவீதம், ராக்பாஸ்பேட் 0.2 சதவீதம் ஆகியவற்றை 1 டன் மக்கிய உரத்துடன் கலந்து, 60 சதம் ஈரப்பதம் இருக்கும்படி 20 நாள்கள் வைப்பதால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உரம் செறிவூட்டப்பட்டது. இந்த உரம் சாதாரண மக்கிய உரத்தைவிட ஊட்டச்சத்து அதிகமாகவும், நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் அதிகமாகவும், தாவர வளர்ச்சியைத் தூண்டவும் உதவும். வீட்டிலிருக்கும் உடைந்த பிளாஸ்டிக் வாளிகளில்கூட இதுபோன்ற இலைக்கழிவைப் போட்டு மக்கிய உரம் தயாரிக்கலாம். அதாவது, பிளாஸ்டிக் வாளி மக்கச் செய்யும் பயிர்க்குழிபோல் செயல்படும்.

## இயந்திரமுறை நெல் நடவுக்கான தொழில்நுட்பங்கள்



இயந்திர நெல்நடவு முறையை மேற்கொள்ள பல்வேறு தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்ற வேண்டும்.

விதை நேர்த்தி: விதைப்புக்கென வைத்திருக்கும் விதைகளில் வீரியம் குறைந்த விதைகளை பிரித்து எடுக்க 15 லிட்டர் கொள்ளளவுடைய பிளாஸ்டிக் வாளியில் 10 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் முட்டையை போட வேண்டும். அதைத்தொடர்ந்து, சமையல் உப்பை சிறிது சிறிதாக தண்ணீரில் போட்டு கரைக்கவேண்டும்.

உப்பு கரைந்து நீரின் அடர்த்தி அதிகமாவதால் முட்டை தண்ணீரின் மேலே மிதந்துவரும் முட்டையின் மேற்பகுதி 50 பைசா அளவுக்கு தண்ணீரின் மேல் தெரியும்போது உப்பை கரைப்பதை நிறுத்தி விடவேண்டும்.அந்த நிலையில் தண்ணீரின் அடர்த்தி நெல் விதையை தரம் பிரிப்பதற்கு ஏற்றதாக அமைகிறது. இவ்வாறு தயாரித்த உப்பு கரைசலில் 10 கிலோ நெல் விதைகளை சிறிது சிறிதாக கொட்டும்பொழுது எடை குறைந்த நெல் விதைகள் உப்பு கரைசலில் மிதக்கும். அதே சமயம் எடை அதிகமான, தரமான நெல் விதைகள் கரைசலில் மூழ்கிவிடும். மிதக்கும் விதைகளை நீக்கிவிட்டு மூழ்கிய விதைகளை வெளியே எடுத்து இரண்டு மூன்று முறை நீரில் கழுவி விதைகளின் மேல் படர்ந்த உப்பை

நீக்கிவிடவேண்டும்.

தரம் பிரித்த விதைகளை சூடோமோனஸ் புளுரசென்ஸ் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து பின் 24 மணி நேரத்திற்கு மூட்டம் போட்டு முளைக்கட்டிய விதைகளை விதைப்பிற்கு பயன்படுத்த வேண்டும்.

பாய் நாற்றங்கால்: ஒரு ஹெக்டேர் நடவு செய்ய 100 சதுர மீட்டர் பரப்பில் பாய் நாற்றங்கால் அமைக்க வேண்டும். நாற்றங்கால் அமைக்க சமமான இடத்தை தேர்வு செய்து பாசன நீர் ஆதாரத்திற்கு அருகில் சற்று உயரமான மண் படுக்கைகளை அமைக்க வேண்டும்.

நாற்று படுக்கையின் அகலம் நாற்றுகளை இலகுவாக பராமரிக்கக் கூடிய அளவில் ஒரு மீட்டரும் நீளம் வயலின் அமைப்பிற்கேற்றார்போல அமைத்து கொள்ளலாம். படுக்கையின் மீது பிளாஸ்டிக் விரிப்பு அல்லது பாலீத்தீன் தாள்கள் கொண்டு பரப்புவதனால் நாற்றின் வேர்கள் மண்ணில் இறங்கி கீழ் நோக்கி செல்வது தடுக்கப்படுகிறது.

பாய் நாற்றங்காலில் பாலீதீன் தாளினை வரித்து அதன் மேல் 1.5 அடி நீளம் 1 அடி அகலம் 5 செ.மீ உயரம் அளவுள்ள செவ்வகங்களை (அகல வாக்கில் இரண்டு செவ்வகமும் நீள வாக்கில் நான்கு செவ்வகம்) உடைய மரசட்டத்தினை வைத்து அதில் தேவையான மண் கலவையை பரப்ப வேண்டும். மண் கலவையில் 70% நன்கு சலித்த வயல் மண், 20% நன்கு மக்கிய பொடியான தொழு உரம் அல்லது மன்புழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் 10% நெல் உமி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதனுடன் 1.5 கிலோ பொடி செய்யப்பட்ட டி.ஏ.பி உரத்தினை கலந்து கொண்டு மரசட்டத்தில் நிரப்ப வேண்டும் இதன் மேல் நன்கு முளை கட்டிய விதைகளை ஒரு சதுர மீட்டருக்கு 100 கிராம் வீதம் சீராக தூவி பின்னர் உலர்ந்த மண்ணை கொண்டு முடி பூவாளி கொண்டு முதல் ஐந்து நாட்கள் வரை ஒரு நாளிற்கு இரண்டு முதல் மூன்று முறை நீர் தெளித்து விடவேண்டும். பின்னர் பாய் நாற்றங்காலை சுற்றியுள்ள வாய்கால் மூலம் 1-2 செ.மீ உயரத்துக்கு நீர் நிறுத்தி 10 முதல் 20 நாட்கள் வரை பராமரித்து நடவு செய்ய வேண்டும். கன மழை அல்லது கூடுதல் வெப்பத்திலிருந்து நாற்றுகளை பாதுகாக்க தென்னங்கீற்று அல்லது வைக்கோல் கொண்டு மூன்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு மூடாக்கு போட்டு பின்னர் எடுத்துவிட வேண்டும்.நாற்றின் வளர்ச்சி குறைவாக இருந்தால் 0.5% யூரியாவுடன் 0.5 % ஜிங் சல்பேட் கரைசலை விதைத்து 8 முதல் 10

நாட்களில் பாய் நாற்றில் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ஏராளமான பலன்களைப் பெறலாம்.

## நெல் பயிரில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்துவது எப்படி? விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை



மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், ஆரணி, மேற்கு ஆரணி, கலசப்பாக்கம் வட்டங்களில் தற்போதைய சம்பா பருவத்தில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நெல் வயல்களில் கருப்பு கதிர் நாவாய் பூச்சி, இலை சுருட்டுப் புழு, துத்தநாக பற்றாக்குறை பரவலாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து திருவண்ணாமலை, அத்தியந்தல் பகுதியில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்தின் பேராசிரியரும், தலைவருமான ப.பரசுராமன் கூறியது:

கருப்பு கதிர் நாவாய்ப் பூச்சிகள் நீர் மட்டத்துக்கு மேலே இருக்கும் பயிரின் அடிப்பகுதியில் காணப்படும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து, பழுப்பு நிறத்தில் இருக்கும். இந்தப் பூச்சிகளின் தாக்கம் மாலை நேரங்களில் செடியின் மேற்பரப்பில் காணப்படும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 250 கிராம் அசிபேட்

அல்லது ஏக்கருக்கு இம்மிடாகுளோபிரிட் 60 மில்லி லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இலை சுருட்டுப்புழு: இந்த வகையான பூச்சிகள் தாக்கப்பட்ட இலைகள், நீள் வாக்கில் மடிக்கப்பட்டு அந்த மடிப்புக்குள் புழுக்கள் காணப்படும். இலைகளின் பச்சைநிற திசுக்களை புழுக்கள் சுரண்டுவதால், இலைகள் வெண்மையாக மாறி, பின்னர் காய்ந்துவிடும். இந்த பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 60 மில்லி குளோர்அன்ட்ரனிலிபுரோல் அல்லது ஏக்கருக்கு 20 மில்லி புளூபென்டியமைடு மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

துத்தநாக பற்றாக்குறை: முறையான பராமரிப்பு இல்லாத நெல் வயல்களில் பாசி படர்ந்து, மண்ணின் மேற்பரப்பு கடினமாக இருக்கும்.

இலை நடுநரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிற கோடுகள் காணப்படும். இந்த பற்றாக்குறை இருந்தால் நெல் மணிகள் பிடிப்பதில் தாமதம் ஏற்படும். நெல் பயிரின் வளர்ச்சி குன்றி காணப்படும். இதை நிவர்த்தி செய்ய பாசி படர்ந்த வயல்களில் ஏக்கருக்கு 3 கிலோ காப்பர் சல்பேட் என்ற அளவில் 25 கிலோ மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இதன் பிறகு நீரை வடித்து விட்டு, துத்தநாக கலவையை ஏக்கருக்கு 200 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்கலாம் என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மணம் வீசும் நெல்

மணமுள்ள அரிசி என உத்தரகண்ட் பாசுமதி அரிசியை குறிப்பிடுகிறோம். தமிழகத்திலும் மணம் வீசும் நெல் வகைகள் இருந்தன. மாம்பூ வாசகன், இலுப்பைபூ வாசகன், வாழைப்பூ வாசகன் போன்ற நெல்வகைகள் அதன் மணத்தால் பெயர் பெற்றவை. எலிவால் சம்பா, குதிரைவால் சம்பா, காடை கழுத்தான் போன்ற நெல்வகைகள் அதன் வடிவத்தால் பெயர் பெற்றன. சிறுமிளகி, பெருமிளகி போன்றவை அளவால் பெயர் பெற்ற நெல் வகைகள். அறுபதாம் கோட்டை நெல்
வகைகள் அதன் அறுவடைக்கு காத்திருக்கும் நாட்களின் எண்ணிக்கையில் பெயர் பெற்றது.

### பவானி பகுதியில் இடி மின்னலுடன் மழை

பவானி: பவானி மற்றும் சுற்று வட்டார பகுதியில், நேற்று மாலை இடி, மின்னலுடன் மழை பெய்தது. பவானி பகுதியில் கடந்த சில நாட்களாகவே வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது. தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் விடுமுறை இருந்தும், வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத அளவுக்கு வெயிலின் தாக்கம் இருந்தது. இந்நிலையில், நேற்று மாலை, கருமேகங்கள் திரண்டு, இடி, மின்னலுடன் இதமான மழை ஒரு மணி நேரம் பெய்தது. இதனால், விவசாயிகள், பொதுமக்கள் சற்று நிம்மதி அடைந்தனர்.

### பீட்ரூட் விலை ஏற்றம் விவசாயிகள் ஆர்வம்

மஞ்சூர்: விலையேற்றம் காரணமாக, பீட்ரூட் அறுவடையில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நீலகிரியில், தேயிலைக்கு அடுத்தப்படியாக மலை காய்கறி விவசாயம் அதிகளவில் நடந்து வருகிறது.

குறிப்பாக கேரட், உருளை கிழங்கு, பீட்ரூட் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கடந்த ஒரு மாதம் காலமாக கர்நாடக மாநிலத்திற்கு காய்கறிகள் கொண்டு செல்லாத காரணத் தால், பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

மலை காய்கறி பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில், பீட்ரூட் அறுவடையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பீட்ரூட் கிலோவுக்கு அதிக பட்சம், 30 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### திண்டுக்கல்லுக்கு 1,322டன் உரம் ரயிலில் வந்திறங்கியது

திண்டுக்கல், வடகிழக்கு பருவமழை காலத்தில், திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளின் உரத்தேவையை பூர்த்தி செய்ய 1,322 டன் உரம் ரயிலில் திண்டுக்கல் வந்திறங்கியது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அக்டோபர் மாத உரத்தேவை குறித்து வேளாண் தரக்கட்டுப்பாட்டுத் துறை துாத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்திடம் கோரியிருந்தது. அதனடிப்படையில் துாத்துக்குடியில் இருந்து 1,322 டன் உரம் ரயிலில் திண்டுக்கல் வந்திறங்கியது. உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது: திண்டுக்கல்லுக்கு யூரியா 500 டன், டி.ஏ.பி., 320 டன், சூப்பர் பாஸ்பேட் 64 டன், அமோனியம் குளோரைடு 125 டன், காம்ப்ளக்ஸ் 316 டன் தற்போது வந்துள்ளது. பருவமழை துவக்கத்தை பொறுத்து, மீண்டும் தேவைக்கேற்ப உரங்கள் வரவழைக்கப்பட்டு இருப்பு வைக்கப்படும், என்றார்.

### கள்ளக்குறிச்சி பகுதியில் நள்ளிரவில் பலத்த மழை

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12:00 மணி முதல், பலத்த மழை பெய்தது. தொடர்ந்து 2 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த மழையால், கள்ளக்குறிச்சி நகரின் முக்கிய சாலைகளில் தண்ணீர் வழிந்தோடியது. சாலையோரம் குட்டைபோல் மழை நீர் தேங்கியது.

கிராம பகுதிகளில் வயல்வெளிகளில் மழை தண்ணீர் தேங்கியது. கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

தேனி: குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி நான்காம் ஆண்டு மாணவர்கள் சார்பில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் சின்னமனூர் , ஓடைப்பட்டியில் விவசாயிகளுக்கு மண் மாதிரி மற்றும் மண் பரிசோதனை செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மாணவர்கள் ஆனந்த், நரேஷ்குமார், குணசேகர், ராமர், அருண்குமார், டேனியல்ராஜ், புகழேந்தி, முத்துக்கருப்பையா, சசிக்குமார், விக்னேஷ்வரன் மற்றும் பலர் பங்கேற்றனர். குன்னூர் துரைச்சாமிபுரத்தில் அங்குள்ள கரும்பு விவசாயிகளுக்கு தோகை உரித்தல் மற்றும் திருந்திய கரும்பு சாகுபடி முறை குறித்து விளக்கமளித்தனர்.

## வீட்டு தோட்டம் அமைத்தல்: விவசாயிகளுக்கு பயிற்சி

கெங்கவல்லி: நடுவலூரில், வீட்டு தோட்டம் அமைத்தல் குறித்து, வேளாண் கல்லூரி மாணவர்கள் பயிற்சி அளித்தனர். கெங்கவல்லி அருகே, நடுவலூரில், தந்தை ரோவர் வேளாண் கல்லூரி மாணவர்கள், கிராம தங்கல் திட்டத்தில், விவசாயிகளுக்கு, வீட்டு தோட்டம் அமைத்தல் குறித்து பயிற்சி முகாம் நடத்தினர். அதில், தோட்டக்கலைத்துறை, வேளாண் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள், வீட்டு தோட்டம் அமைப்பதின் முறைகள், அதன் பயன்கள் குறித்தும், மாதிரி வீட்டு தோட்டம் காட்சிக்கு வைத்து, விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இதில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மானிய விலையில் விவசாய கருவிகள் இயந்திரங்கள் பெற கலெக்டர் அழைப்பு**

சேலம்: சேலம் மாவட்டத்தில், மானிய விலையில் விவசாய கருவிகள், இயந்திரங்கள் பெற விண்ணப்பிக்குமாறு, கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை: வேளாண் இயந்திரமாக்கும் திட்டத்தில், வேளாண் கருவிகள், இயந்திரங்கள், மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்க, சேலம் மாவட்டத்துக்கு, 26.07 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், பவர் டில்லர், சுழற்கலப்பை, குழி தோண்டும் கருவி, விசை களையெடுக்கும் இயந்திரம், பல்வகைப்பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டைவெட்டும் கருவி, விசைத்தெளிப்பான், மனித தோழமை கருவிகளான தென்னை மரம் ஏறும் கருவி, நேரடி நெல்விதைப்பு கருவி மற்றும் டிராக்டர், பவர் டில்லர் ஆகியவற்றால் இயக்கப்படும் இதர வேளாண் கருவிகள், இயந்திரங்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. சிறு, குறு ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் வரையும், இதர விவசாயிகளுக்கு, 40 சதவீதம் வரையும், அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மானியத்தொகையில், எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கபபடும். இத்திட்டத்தில், பயனடைய விரும்பும் விவசாயிகள், மாவட்ட வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் இருந்து விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்கள், வேளாண் பொறியியல் துறையில், முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து, முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். வேளாண் பொறியியல் துறையின் அனுமதி கடிதம் கிடைத்தவுடன், தேர்வு செய்த கருவிகள், வேளாண் இயந்திரம் ஆகியவற்றிற்குரிய முழுத்தொகையையும், விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு, கேட்பு வரைவோலை மூலம் வழங்க வேண்டும். வேளாண் இயந்திரங்கள், கருவிகளை, விவசாயிகள் பெற்ற பின், அதை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதிசெய்து, அதற்குரிய முழு மானியத்தொகையையும், விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்துவர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெயிலின் தாக்கம் உச்சம் உப்பு உற்பத்தி அதிகம்

ஆர்.எஸ்.மங்கலம், வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் உப்பளங்களில் உப்பு உற்பத்தி அதிகரித்து வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிபட்டினம், சம்பை, திருப்பாலைக்குடி, வாலிநோக்கம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் உப்பளங்கள் அமைக்கப்பட்டு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் முதல் தர உப்பு அயோடின் கலக்கப்பட்டு உணவு பொருட்களுக்கும், இதர உப்புகள் கருவாடு, தோல் உள்ளிட்ட பொருட்கள் பதப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் கடைசி வாரம் முதல் ஜனவரி மாதம் வரை மழைகாலம் என்பதால் உப்பு உற்பத்தி நிறுத்தப்படும். இந்த ஆண்டு பருவமழைக்கான அறிகுறி தென்படவில்லை. மாறாக கோடையை மிஞ்சும் விதத்தில் வெளுத்து வாங்குகிறது. இதனால் உப்பு உற்பத்தி அதிகரித்துவருகிறது. உப்புகளை சேகரிப்பதில் உப்பள தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். உப்பளங்களில் உப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. டன் 1,200 ரூபாய்க்கு விற்பனையான உப்பு தற்போது 750 ரூபாயாக குறைந்துள்ளது.
தொடர்ந்து விலை வீழ்ச்சியடைவதால் உப்பு கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயங்குகின்றனர். இதனால் உப்பளங்களில் டன் கணக்கில் உப்பு குவிந்துள்ளது. அதை பாதுகாக்க தென்னங்கீற்று, ஓலை பாய்களால் மூடியுள்ளனர்.

## சாரலுடன் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

ராசிபுரம்: ராசிபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான கவுண்டம்பாளையம், ஆண்டகளூர்கேட், பிள்ளாநல்லூர், ஆட்டையாம்பட்டி பிரிவு, வெண்ணந்தூர், பட்டணம் உள்ளிட்ட இடங்களில், நேற்று மாலை, சாரல் மழை பெய்தது. அரை மணி நேரமாக அமைதியாக பெய்த மழை, மாலை, 6:44 மணிக்கு சிறு காற்றுடன் கூடிய மழையாக பெய்தது. கடந்த மாதம் முழுவதும், கடலை அறுவடை செய்த விவசாயிகள், அதே ஈரத்துடன் உழவு செய்தனர். ஆனால், தக்க மழை இல்லாமையால் பயிர் செய்ய இயலவில்லை. இந்நிலையில், நேற்று, மூன்று மணி நேரமாக மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இதனால், தங்கள் விளைநிலங்களில் சோளம், கடலை, மரவள்ளிகிழங்கு நடவுக்கு, விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

## சோளத்தட்டு விலை கடும் உயர்வு: கால்நடை விவசாயிகள் அதிர்ச்சி

நாமக்கல்: கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படும், சோளத்தட்டு கடுமையாக விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில், பருவ மழை சரியாக பெய்யாமல் போனதால், மழையை பெரிதும் நம்பி பயிரிட்ட சோளத்தட்டு, முழுமையாக வளர்ச்சி அடையாமல் கருகியது. இதன் காரணமாக, கால்நடைகளுக்கு தேவையான சோளத்தட்டு தீவனத்திற்கு, கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், அதன் விலையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக, 50 கட்டுகள் கொண்ட ஒரு விசுவின் விலை, 750 ரூபாயில் இருந்து, 2,000 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: போதிய மழை இல்லாமல், பயிரிடப்பட்ட சோளப்பயிர் கருகிப் போனதால், நாமக்கல் மாவட்டத்தில், கால்நடைகளுக்கு தேவையான சோளத்தட்டு விலை அதிகரித்துவிட்டது. கடந்த சில நாட்களுக்கு முன், 750 ரூபாய்க்கு, விற்பனை செய்யப்பட்ட, 50 கட்டு கொண்ட ஒரு விசு சோளத்தட்டு, தற்போது, 2,000 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இதனால், கால்நடைகளை பராமரிப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## குலை நோய் தாக்குகலில் தப்பிக்க நெல்லூர் ரகம்: டீலக்சு-க்கு விடை கொடுத்த வேளாண்துறை

காரைக்குடி, கடந்த ஆண்டு சாக்கோட்டையில் டீலக்ஸ் ரகத்தில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டதை தொடர்ந்து, இந்த ஆண்டு டீலக்ஸ் விதைகளுக்கு வேளாண்துறையினர் விடை கொடுத்து என்.என்.எல்.ஆர்., (நெல்லூார்) ரகத்தை பரிந்துரை செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் மேகமூட்டமுள்ள வானம், தொடர் மழை மற்றும் தூறலால் ஏற்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாக தஞ்சை மாவட்டத்தின் நெற்பயிர்களில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டது. அந்த நோய் மெல்ல மெல்ல பரவி, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்ட பகுதிகளிலும் பரவியது. சாக்கோட்டை அருகே உள்ள பெரியகோட்டை, களத்தூர், நாட்டுச்சேரி

குரூப்களில் உள்ள செங்கரை, தட்டாகுடி, பீர்க்கலைக்காடு, அமனாபட்டி, பொய்யாவயல், ஸ்ரீரங்கபுரம், மேலசெட்டிவயல் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்பயிர்கள் குலை நோயால் பாதிக்கப்பட்டன.

குலை நோய் தாக்குதலால், இலைகளில் சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்பட்டது. தீவிர நோய் தாக்குதலுக்கு உள்ளான பயிர் முழுவதும் எரிந்தது போல் தோற்றமளித்தது. கதிர் பருவ நிலைக்கு முன்பே கழுத்து பகுதியில் குலை நோய் தாக்கியதால் மகசூல் முற்றிலும் முடங்கியது.

வேளாண் துறை சார்பில் குலை நோய் தாக்குதலுக்கு உரிய டிரைசைக்ளோசோல் உள்ளிட்ட பல்வேறு மருந்து பரிந்துரைக்கப்பட்டாலும், நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்தனர்.

இதற்கு காரணம் 10 ஆண்டுக்கு முந்தைய ரகமான டீலக்ஸ் பொன்னி என்று அழைக்கப்படும் பி.பி.டி. 5204 நெல் ரகத்தை விவசாயிகள் தொடர்ந்து பயிரிட்டு வந்ததால், அதன் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போனது எனவும் கூறப்பட்டது. இதனால், இந்த ஆண்டு, வேளாண் துறை சார்பில் டீலக்ஸ் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்க்க வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டது. டீலக்சு-க்கு பதிலாக என்.எல்.ஆர்., கோ-ஆர்.51, கோ-ஆர் 49, கோ-ஆர் 50- ரகங்களை பயிரிட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. என்.எல்.ஆர்., எனப்படும் நெல்லூர் ரகம், டீலக்ஸ் நெல்லை போன்றே சன்ன ரகம். குலை நோய் தாக்குதல் குறைவு. ஒரு ஏக்கருக்கு 3,500 கிலோ வரை அதிக பட்ச மகசூல்கிடைக்கும், என எடுத்துரைக்கப்பட்டது.
விவசாயிகளும் கடந்த ஆண்டை போல் நஷ்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மேற்கண்ட ரகங்களையே வேளாண்துறை அலுவலகங்களில் வாங்கி பயிரிட ஆரம்பித்துள்ளனர்.

**தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலையில் கனமழை: விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில், நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பெய்த மழையால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் சராசரி அளவை விட கூடுதலாக பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதையடுத்து, தர்மபுரி மாவட்டம் உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள், மானாவரி, இறவை சாகுபடியில் பயிர்களை ஆர்வத்துடன் சாகுபடி செய்தனர். ஆனால், வானிலை ஆராய்ச்சி மையத்தின் கணிப்பு தவறியதால், தென்மேற்கு பருவமழையை நம்பி சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, மானாவரியில் பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். ஆனாலும், வடகிழக்கு பருவமழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், தென்மேற்கு பருவமழை மத்திய காலத்தில், மானாவரி பயிர்களை சாகுபடி செய்தனர். அவர்களின் நம்பிக்கையை ஏமாற்றாமல், தர்மபுரி, அரூர் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று இரவு, 8:30 மணி முதல், நேற்று அதிகாலை, 3;00 மணி வரை விட்டு, விட்டு மழை பெய்தது. இந்த மழை வாடி வந்த பயிர்களுக்கு உயிர் நீராக அமைந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்ட அளவில், தர்மபுரியில் அதிகபட்சமாக, 69 மில்லி மீட்டர், அரூர் பகுதியில், 55.20, பாப்பிரெட்டிப்பட்டியில், 12, ஒகேனக்கல்லில், 8.20, பாலக்கோடு, 4.10, பென்னாகரத்தில், 3 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது. நேற்று மதியம், 2 மணிக்கு மேல், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

இதேபோல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று பரவலாக லேசான மழை பெய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. கடும் வெயில் வாட்டி வந்த வேலூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, 10:00 மணி

முதல் நேற்று அதிகாலை, 2:00 மணி வரை பரவலாக மழை பெய்தது. வேலூர், குடியாத்தாம், காட்பாடி, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாண்டியாவில் பலத்த மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மாண்டியா: கர்நாடக மாநிலம் மாண்டியாவில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கர்நாடகத்தின் காவிரி பாசன மாவட்டங்களான மைசூர், சாம்ராஜ்நகரிலும் கனமழை பெய்கிறது. கன மழையால் 3 மாவட்டங்களில் உள்ள ஏரி, குளங்களிலும் நிரம்பி வருகின்றன.

**நீலகிரி மாவட்டத்தில் பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலர்கள்: சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிப்பு**



நீலகிரி: நீலகிரி மாவட்டத்தில் பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலர்களை சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்து வருகின்றனர். முல்லிக்கூர் கிராமத்தை ஒட்டிய மலைப்பகுதியில் ஏராளமான குறிஞ்சி செடிகள் உள்ளன. இவை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமேட பூக்கும் தன்மை உடையவை. ஆனால் 3, 4 மற்றும் 6 ஆகிய ஆண்டுகளில் பூக்கக்கூடிய குறிஞ்சிச் செடிகளும் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வகைச் செடிகளில் ஊதா நிறத்தில் பூக்கள் தற்போது பூத்துள்ளன. நீலநிற போர்வை போர்த்தி உள்ளது போல உள்ள மலைப் பள்ளத்தாக்கை அப்பகுதி மக்களும், சுற்றுலா பயணிகளும் கண்டு ரசித்து வருகின்றனர்.

இந்த அரியவகை மலர்களை அனைத்து தரப்பினரும் பார்வையிட புதிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மலைப்பகுதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வளர்ந்து வரும் குறிஞ்சிச் செடிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

## இடைப்பாடியில் கிணற்று பாசனம் மூலம் நெல்நடவு பணி தீவிரம்

இடைப்பாடி, : இடைப்பாடியில் கிணற்று பாசனம் மூலம் நெல் நடவு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இடைப்பாடி பகுதியில் பருவமழை பொய்த்து போனதால் தேவூர், செட்டிப்பட்டி, புள்ளக்கவுண்டம்பட்டி, பொன்னம்பாளையம், நல்லத்தங்காயூர், பூமணியூர் மற்றும் செட்டிமாங்குறிச்சி, இருப்பாளி, கோனசமுத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் கிணற்று பாசனம் மூலம் நெல் நடவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்கலில் பருவமழை பொய்த்து ோபானதால், கிணற்று பாசனத்திற்கு மாறி உள்ளனர். இதன் ஒரு பகுதியாக வயல்களில் நாற்றங்கல் அமைத்து நெல் நடவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், ‘நடப்பு பருவத்தில் மழை பொய்த்து போனதால் இடைப்பாடி மற்றும் சுற்றுப்புற விவசாயிகள் கிணற்று பாசன முறையை பயன்படுத்தி நெல் நடவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மழையால் நீர்வரத்து கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு தற்போது ஏமாற்றமே மிஞ்சியது. மேலும், மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு கரை கால்வாயில் தண்ணீர் திறந்து விடாத நிலையில் கிணற்று பாசனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது’ என்றனர்.

## வரத்து குறைந்ததால் பூண்டு விலை உயர்வு கிலோ □150க்கு விற்பனை

சேலம், : வட மாநிலங்களில் இருந்து சேலம் மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து குறைந்ததால், ஒரு கிலோ பூண்டு □150 என விலை உயர்ந்துள்ளது. இந்தியாவில் மகாராஷ்டிரா, குஜராத், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பூண்டு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றது. இங்கு அறுவடை செய்யப்படும் பூண்டு, இந்தியா முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக வட மாநிலங்களில் போதிய மழை இல்லாததால் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக சேலம் மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து சரிந்து, விலை அதிகரித்துள்ளது. இது குறித்து சேலம் மொத்த பூண்டு வியாபாரிகள் கூறுகையில்,‘‘கடந்த ஜூலை, ஆகஸ்டில் பூண்டு வரத்து ஓரளவிற்கு இருந்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வட மாநிலங்களில் விளைச்சல் குறைந்ததால், வழக்கமாக வரவேண்டிய வரத்து சரிந்துள்ளது. இதன் காரணமாக கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பு (சில்லரை விலையில்) ☐80 முதல் ☐ 100வரை விற்ற ஒரு கிலோ பூண்டு, நேற்றைய நிலவரப்படி ☐145 முதல் ☐150 என விற்பனை செய்யப்படுகிறது. நடப்பாண்டு இறுதி வரை இதே விலை தான் விற்கும். அதன்பின்னர், புது பூண்டு வரத்து வரவுள்ளதால், புத்தாண்டில் விலை குறைய வாய்ப்புள்ளது,'' என்றனர்.

## விழுப்புரம் மாவட்டத்தில் விடிய, விடிய கொட்டி தீர்த்த மழை

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை முதல் பரவலாக மழை கொட்டி தீர்த்தது.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழையின் அளவு குறைந்துகொண்டே செல்கின்றன. இதனால் நீர்நிலையான ஏரி, குளங்கள் வறண்டுபோய் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. குடிநீருக்கு தட்டுப்பாடும், விவசாயமும் கேள்விக் குறியாகும் நிலை உருவாகி வருகின்றன. இதனிடையே சில மாதங்களுக்கு முன் பெய்ய வேண்டிய கோடைமழையும் போதிய அளவு பெய்யாததால் வெப்பத்தின் தாக்கம் குறையாமல் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வந்தனர்.

இருநாட்கள் முன்பு வரை கடுமையாக வெயில் மக்களை வாட்டிவதைத்தது. இதனிடையே வெப்பசலனம் காரணமாக மாலை நேரங்களில் கருமேகங்கள் கூடி மழை பெய்வதைப்போல் தோற்றத்தை ஏற்படுத்தினாலும் சாரல் மழையோடு நின்று மக்களை ஏமாற்றிவிட்டு சென்றது.

இதனிடையே நேற்று காலை முதல் விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. அதிகாலை 4 மணி முதல் பெய்யத்துவங்கிய மழை இடைவிடாமல் கொட்டிதீர்த்தது. விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை உள்ளிட்ட பகுதியிலும் பரவலாக மழை பெய்தது. விழுப்புரத்தில் பெய்த மழையால் தாழ்வான இடங்களில் தண்ணீர் சூழ்ந்தன. ரயில்வே மேம்பாலம் அருகே, போக்குவரத்து மிகுந்த சாலையான நேருஜி வீதி உள்ளிட்ட தாழ்வான இடங்களில் தண்ணீர் சூழ்ந்தன. நீண்டநாட்களுக்குப்பிறகு

பெய்துவரும் மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் தைத்திருநாள் அறுவடைக்கு தற்போது நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன், மழை பெய்தவண்ணம் உள்ளது.

## சேலம் மாவட்டத்தில் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கல்

சேலம், : சேலம் மாவட்டத்தில், மானிய விலையில் இயந்திரங்களை பெற விரும்பும் விவசாயிகள், வேளாண் பொறியியல் அலுவலத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள அறிக்கை:

வேளாண்மையை இயந்திர மயமாக்கும் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. நடப்பாண்டு சேலம் மாவட்டத்தில் □26.07 லட்சம் மானியம் வழங்கப்படவுள்ளது. வேளாண் பொறியியல் துறையின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ், நெல்நாற்று நடவு இயந்திரம், பவர்டில்லர், சுழற்கலப்பை, குழிதோண்டும் கருவி, விசைகளையெடுக்கும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டைவெட்டும் கருவி, விசைத் தெளிப்பான்கள், தென்னைமரம் ஏறும் கருவி, நேரடி நெல்விதைப்புக் கருவி போன்றவை மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

இது தவிர, டிராக்டர் மற்றும் பவர்டில்லர் ஆகியவற்றால் இயக்கக்கூடிய இதர வேளாண்மைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படும். சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரையும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் வரையும், அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

வேளாண் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து, விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை, மானிய உதவியுடன் வாங்கி பயனடையலாம். விருப்பமுள்ள விவசாயிகள், வேளாண்மை பொறியியல் மாவட்ட

செயற்பொறியாளர் அல்லது உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து, தகுந்த ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள், கருவிகளை பெற்ற பின்னர், அதனை வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்கள் உறுதிசெய்து, அதற்குரிய முழு மானியத் தொகையையும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துவர். கடந்த ஆண்டு தீர்வு செய்யப்படாத விண்ணப்பங்களுக்கு, இந்த நிதியாண்டில் முன்னுரிமை வழங்கப்படும். இதுகுறித்த மேலும் தகவலுக்கு, அந்தந்த வட்டத்தில் இயங்கும் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொய்யா சீசன் தொடக்கம் கிலோ □60க்கு விற்பனை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கொய்யா சீசன் தொடங்கியுள்ளது. நேற்று ஒரு கிலோ □60க்கு விற்பனை செய்யப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் நாயக்கன்கொட்டாய், மொரப்பூர், செம்மண்ணஅள்ளி, கிருஷ்ணாபுரம், பொம்மிடி, பாலக்கோடு, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கொய்யா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மாவட்டத்தில் கொய்யா சீசன் துவங்கியுள்ளது.

பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் பகுதியில் விளைந்த கொய்யாவை வியாபாரிகள் பறிக்க தொடங்கியுள்ளனர்.

தர்மபுரி ஆறுமுகஆசாரி தெரு, சின்னசாமி நாயுடு தெரு, பென்னாகரம் ரோடு, பழைய பஸ் ஸ்டாண்ட், புதிய பஸ் ஸ்டாண்டை சுற்றியுள்ள பகுதியில் தள்ளுவண்டியில் கொய்யா விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ □60க்கு விற்பனை செய்யப்படுகிறது. தரம் பிரித்த ஒரு காய் □5, □10 என விற்பனை செய்யப்படுகிறது.

கொய்யாவில் அதிக சத்து இருப்பதால், பொதுமக்கள் விலையை பொருட்படுத்தாமல் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், 'நடப்பாண்டில் போதிய பருவ மழை இல்லாததால், கொய்யா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டு கிலோவுக்கு □20 உயர்ந்துள்ளது. இன்னும் 10 நாளில் கொய்யா அறுவடை அதிகரிக்கும். அதன்பின் விலை சரிய வாய்ப்பு உள்ளது' என்றனர்.

## மாவட்டத்தில் 151.5 மிமீ மழை பதிவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ேநற்று முன்தினம் 151.5 மிமீ மழை பதிவானது. தர்மபுரி கடந்த ஒரு மாதமாக கோடையை போல் வெயில் கொளுத்தி வந்தது. இதனால் பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர். கடுமையான ெவயிலால், நிலக்கடலை, சோளம் உள்ளிட்ட பயிர்களும் கருகியது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இரவு 9.30 மணியளவில் திடீரென மழை பெய்ய தொடங்கியது. இரவு முழுவதும் பெய்த மழையால், மாவட்டத்தில் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை உருவானது. மாவட்டத்தில் மழை அளவு விபரம் (மில்லி மீட்டரில்): தர்மபுரி69, அரூர்55.2, பாப்பிரெட்டிப்பட்டி12, பாலக்கோடு4.1, பென்னாகரம்3, ஒகேனக்கல்8.2 என மொத்தம் 151.5 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. நேற்றிரவும் மழை பெய்தது.

## பவானியில் கனமழை

பவானி, : ஈரோடு மாவட்டம் முழுவதும் தற்போது வெயில் சுட்டெரித்து வருவதால் பகல் நேரங்களில் வெயிலால் பொதுமக்கள் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை பவானியின் வடக்கு பகுதிகளில் கருமேகங்கள் சூழ்ந்து காணப்பட்டது. லேசாகப் பெய்யத் தொடங்கிய மழை, சற்று நேரத்தில் இடி, மின்னலுடன் கனமாகப் பெய்தது. இதனால், ரோடுகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பொதுமக்கள் ஆங்காங்கே கடைகளுக்குள் அடைக்கலம் புகுந்தனர். பலத்த காற்றும் வீசியதால் வாகன ஓட்டிகள் வெளியே செல்லமுடியாத நிலை நீடித்தது.  பவானி சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழையின்றி கருகி வந்த

நிலக்கடலை உள்ளிட்ட மானாவாரி பயிர்களுக்கு இம்மழை சற்றே பயனளிக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## அவிநாசியில் ரூ.6.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம், ;அவிநாசியில் நேற்று ரூ.6.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண் மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 330 பருத்தி மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.6,515 வரையிலும், டி.சி.எச். ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.6,500 வரையிலும், மட்ட ரகம் ரூ.1,400 முதல் ரூ.1,600 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ.6.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 53 விவசாயிகளும், 8 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## மலைபூண்டு வரத்து குறைந்ததால் கிலோ ரூ.220 ஆக விலை உயர்வு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு மலை பூண்டு வரத்து குறைந்ததால், ஒரு கிலோ ரூ.220 ஆக விலை உயர்ந்துள்ளது.

பொள்ளாச்சி மார்க்கெட்டுகளுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து காய்கறிகள் வரத்து அதிகளவில் காணப்பட்டாலும், பெல்லாரி மற்றும் பூண்டு வெளியிடங்களில் இருந்து அதிகம் கொண்டு வரப்படுகிறது.இதில், கர்நாடகா, தமிழகத்தில் ராஜபாளையம், தேனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பூண்டு டன் கணக்கில் கொண்டு வரப்படுகிறது. இதை உள்ளூர், கேரள வியாபாரிகள் மொத்தமாக வாங்கி செல்கின்றனர். மலை பூண்டு, நாட்டு பூண்டு என தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதில் கடந்த ஒரு மாதம் வரையிலும், பூண்டு வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.100 முதல் ரூ.130 வரை என குறைந்த விலைக்கு போனது.தற்போது, தேனி மற்றும் ராஜபாளையம் உள்ளிட்ட பகுதியில் மலைப்பூண்டு அறுவடை குறைந்துள்ளது. இதனால், கடந்த சில வாரமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வரத்து மிகவும்

குறைந்து விட்டது.கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு மார்க்கெட்டுக்கு தினமும் 7 டன் பூண்டு விற்னைக்கு வந்தது. தற்போது மூன்றரை டன்னாக குறைந்து விட்டது. இதனால் மலை பூண்டு ஒரு கிலோ ரூ.200 முதல் 220 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## விவசாயிகளுக்கு புதிய பயிர் காப்பீடு திட்ட விளக்க கூட்டம்

தொட்டியம், : தொட்டியம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டம் பற்றிய விளக்க கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜாமணி தலைமையில் நடந்தது.விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து வேளாண்மை இன்சூரன்ஸ் கம்பெனி திட்ட மேலாளர் சிவக்குமார் மற்றும் துணை திட்ட மேலாளர் கிருஷ்ணகுமார் ஆகியோர் விளக்கம் அளித்தனர். கூட்டத்தில் பிரதம மந்திரியின் புதிய காப்பீடு திட்டத்தின்கீழ் பயிர் சாகுபடி செய்ய இயலாமையின்போதும், பயிர் சாகுபடி முழுமையாக செய்ய முடியாத நேரங்கள், மழை, வெள்ளம் மற்றும் புயல் நேரங்களில் ஏற்படும் இழப்பீட்டின்போதும், பயிர் அறுவடைக்குப்பின் ஏற்படும் நஷ்டம் என நான்கு கட்டங்களில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத்தொகை வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் கடன்பெறும் மற்றும் கடன்பெறா விவசாயிகள் இருவருமே சேர்ந்து பயன்பெறலாம். கடன்பெறும் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் மூலம் பிடித்தம் செய்து கொள்வர். கடன்பெறா விவசாயிகள் வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகி படிவத்தை பூர்த்தி செய்து ரேஷன் கார்டு நகல், சிட்டா அல்லது அடங்கல் மற்றும் ஆதார் அட்டை நகல் இணைக்கப்பட்டு ஏக்கருக்கு ரூ.375 பிரிமிய தொகை செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் சேருவதற்கான காலக்கெடு சம்பா பருவத்தில் பயிர் விதைக்க இயலாமைக்கு வரும் 15ம் தேதிக்குள் விண்ணப்பம் அளிக்க வேண்டும். சம்பா நடவு செய்த விவசாயிகள் நவம்பர் 30ம் தேதிக்குள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

## புதிய தொழில்நுட்பத்தில் மரக்கன்றுகள் நடவு

கரூர்: புதிய தொழில்நுட்பத்தில் மரக்கன்றுகள் நடும் பணியை கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அரவக்குறிச்சி ஒன்றியத்தில் புதிய தொழில்நுட்ப முறையில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி, நிலத்தடிநீர் செறிவூட்டும் பணியை கலெக்டர் கோவிந்தராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வெஞ்சமாங்கூடலூர் மேற்கு ஊராட்சி திருமாணிக்கம்பட்டி குளங்களை பார்வையிட்டு வடகிழக்கு பருவ

மழைக்கு முன்னர் வரத்து வாரிகளையும் குளத்தையும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் தூர்வாரி சுத்தம் செய்யும் பணியை விரைந்து முடிக்கவேண்டும்.

புங்கம்பாடி மேல்பாகம் ஊராட்சி பால்வார்பட்டியில் ஆழ்குழாய் கிணறு நிலத்தடிநீர் செறிவூட்டும் பணியை விரைந்து முடிக்க உத்தரவிட்டார். தடாகோயில், சாலையோர மரக்கன்று பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம்பிரித்து மறு சுழற்சிக்கு பயன்படும் வகையில் நடைபெறும் பணிகளை பார்வையிட்டார். பின்னர் கலெக்டர் கூறுகையில், கரூர் மாவட்டத்தில் பொது இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அரவக்குறிச்சி எல்லையம்மன்கோயில், நந்தவனம் பகுதியில் 2.5 ஏக்கரில் ரூ.17.70 லட்சத்தில் 500 பென்சில், வாகை மரங்கள் குழாய்மூலம் மணல்பரப்பி நீருற்றி, நேரடியாக வேருக்கு நீர் செல்லும் வகையில் புதிய தொழில்நுட்ப முறையில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆழ்குழாய் கிணறு அருகே மழைநீர் சேமிப்பு, நிலத்தடி நீர்செறிவூட்டும் பணிகள் நடைபெற்றுவருகிறது என்றார். ஆய்வின்போது ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கோமகன், வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய பொறியாளர் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தென்னையில் கொண்டை வளைதல், நுனி சிறுத்தல் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்

பட்டுக்கோட்டை, : தென்னையில் கொண்டைவளைதல் மற்றும் நுனி சிறுத்தல் நோய்களை கட்டப்படுத்தும் வழிமுறை குறித்து திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் விளக்கமளித்துள்ளதாவது: தென்னையில் கொண்டை வளைதல் (அல்லது) இலை பிரியாமை நோய் என்பது போரான் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையால் ஏற்படுகிறது. இது பெரும்பாலும் மூன்று ஆண்டுகள் வயதுடைய இளம் மரங்களில் காணப்படுகிறது. இதனால் தென்னை இலைகள் சிறுத்து விரிவடையாமல் காணப்படும். இலைகள் இயல்பான நிலையில் விரிவடையாமல் ஒன்றுக்கு ஒன்று பின்னிக் கொண்டு வெளிவர இயலாத நிலையில் காணப்படும். மேலும் வளர்ந்த மரங்களில் இலைகளின் வளர்ச்சி மிகவும் குறைந்து மட்டைகள் குருத்து பாகத்திலிருந்து வளைந்து

காணப்படும். குறைபாடு முற்றிய நிலையில் குரும்பைகளும், இளங்கன்றுகளும் உதிர்ந்து விடுகின்றன. நிவர்த்தி முறைகள். இதனை நிவர்த்தி செய்ய மரம் ஒன்றிற்கு 50 கிராம் வெண்காரம் (போராக்ஸ்) இரண்டு முறை தொடர்ந்து மூன்று மாத இடைவெளியில் அளிப்பதனால் இலைகள் நன்றாக பிரிந்து வளர்ச்சியடைகிறது.

வேர் மூலம் 25 பி.பி.எம் அளவு போரான் கரைசலை செலுத்துவதால் மரம் போரான் குறைபாட்டிலிருந்து உடனடியாக நிவர்த்தியடைகிறது. எனினும் மண்ணில் போராக்ஸ் இடுவது மரத்திற்கு நீண்ட கால பலனை அளிக்கும். நுனி சிறுத்தல் நோய்: ஆரம்ப நிலையில் மட்டைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் தோற்றமளிக்கும். இது தொடரும் பொழுது இலை இணுக்குகளில் பச்சையம் குறைந்து சூரிய ஒளியின் மூலம் தாவர உணவு தயாரித்தல் வெகுவாக தடைபடுகிறது. இதனால் காய்களின் உற்பத்தி எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் அளவிலும் சிறுத்து விடுகிறது. இதனை நிவர்த்தி செய்ய, குறைபாடு ஆரம்ப நிலையில் உள்ள மரங்களை மட்டுமே காப்பாற்ற இயலும்.

முற்றிய நிலையில் பென்சில் முனை தோற்றத்துடன் காணப்படும் மரங்களை வெட்டி அகற்றிவிட்டு தரமான தென்னங்கன்றுகளை மீண்டும் நடுவது நல்லது. பெர்ரஸ் சல்பேட் 2000 பிபிஎம் (2 கிராம் 1 லிட்டர் நீரில்) செலுத்தலாம் (அல்லது) மரம் ஒன்றுக்கு துத்தநாக சல்பேட், தாமிர சல்பேட், மாங்கனீசு சல்பேட், பெர்ரஸ் சல்பேட் மற்றும் போராக்ஸ் இவை ஒவ்வொன்றும் 225 கிராம் மற்றும் அம்மோனியம் மாலிப்டேட் 10 கிராம் ஆகிய நுண்ணூட்டச் சத்துக்களை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து மரத்தின் வேர் பகுதியில் ஊற்ற வேண்டும். மேலும் பத்து நாட்களுக்கு ஒருமுறை கோடையில் தண்ணீர் பாய்ச்சுவது அவசியமாகும். சிபாரிசு செய்யப்படும் அளவில் ராசயனம் மற்றும் இயற்கை உரங்களை ஒவ்வொரு ஆண்டும் இடுவதால் மரத்தின் வளமும், காய்க்கும் திறனும் காக்கப்படுகிறது என்று வேளாண் உதவி இயக்குனர் மதியரசன் தெரிவித்துள்ளார்.

## பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகளுக்கு சந்தேகம் இருந்தால் வேளாண் துறையை அணுகலாம் : அதிகாரி தகவல்

சீர்காழி: பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகளுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், வேளாண் துறையை அணுகலாம் என்று வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். பிரதமரின் பயீர் காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தபட்டுள்ளது. இந்த திட்டத்தில் இணையும் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பயிர்கள் இயற்கை சீற்றங்களின் போது பாதிக்கும் போது உரிய இழப்பீட்டு தொகை இந்த திட்டத்தின் முலம் பெற முடியும்.

இந்த திட்டத்தில் சீர்காழி ஒன்றிய அளவில் தகுதியான விவசாயிகளை முழுமையான அளவிற்கு இணைத்திட ஏதுவாக சீர்காழி வட்டார வேளாண்மைத்துறை சார்பில் வேளாண்மை அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகங்கள், ஊராட்சி மன்ற அலுவலங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகளவில் கூடும் பகுதிகளில் சீர்காழி வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் மேற்பார்வையில் பயிர்காப்பீட்டு திட்டம் பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்கிடவும், தகவல் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தவும் நடவடிக்கை எடுத்திட ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் கூறுகையில், விவசாயிகளின் நலன் கருதி இந்த காப்பீடுத்திட்டம் தமிழக அரசு வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஏதேனும் சந்தேகங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டால் வேளாண்மை துறையை அணுகலாம் என்றார்.

## சம்பா நாற்றங்காலில் குருத்துப்பூச்சி தாக்குதல் அதிகரிப்பு

நீடாமங்கலம்: சம்பா நாற்றங்காலில் குருத்துப்பூச்சி தாக்குதல் அதிகளவில் உள்ளன. இவற்றை கட்டுப்படுத்தும் வழிமுறை பற்றி வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் நெல் நாற்றங்காலில் ஆங்காங்கே சில இடங்களில் குருத்துப்பூச்சியின் தாக்குதல் காணப்படுகின்றன. நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் ஆகியோர் பாதிக்கப்பட்ட நெல் நாற்றங்கால்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் குருத்து பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி அவர்கள் கூறியது: மஞ்சள் நிறத்தில் கூரிய மூக்கு போன்ற அமைப்போடு அந்துப்பூச்சிகள்

இலைகளின் நுனியில் அமர்ந்திருக்கும். அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை இதன் தாக்குதல் மிக அதிகமாக காணப்படும். நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் உள்ள இளம் பயிர்களின் தூர்கட்டும் பருவம் வரை தாக்கும் போது நடுக்குருத்து காய்ந்து விடும். அதனை பிடித்து இழுத்தால் எளிதாக கையோடு வந்துவிடும்.

குருத்துப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் முட்டை ஒட்டுண்ணியை இரு முறை 2சிசி என்ற அளவில் வெளியிட வேண்டும். வேப்பெண்ணைய் 3 சதம் அதாவது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மிலி அல்லது 5சதம் வேப்பங்கொட்டை கரைசலை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும். நாற்றுகளை வயலில் நடும்போது முட்டைக் குவியல்கள் உள்ள இலைகளின் நுனிகளை கிள்ளிவிட்டு நடவு செய்ய வேண்டும்.

புரபனோபாஸ், குயினல்பாஸ் டிரையஸோபாஸ் ஆகிய பூச்சிக்கொள்ளி மருந்துகளில் ஏதாவது ஒரு மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும். வயலில் காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, தரைவண்டுகள், ஒட்டுண்ணி குளவிகள், நீர்த்தாண்டி, நீர்மிதப்பேன் தட்டான், இடுக்கிவால் பூச்சிகள் போன்றவற்றை பாதுகாத்து பெருக்க வேண்டும் என்றனர்.

### வேளாண் திட்டங்களுக்கு ரூ.58.85 லட்சம் ஒதுக்கீடு

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மையை இயந்திரமயமாக்குதல் திட்டத்தை செயல்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.58.85லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு நெல்நாற்று நடவு இயந்திரம், பவர் டிரில்லர், சுழற்கலப்பை, குழிதோண்டும் கருவி, களையெடுக்கும் இயந்திரம், பல்வகை கதிரடிக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, விசைத்தெளிப்பான், டிராக்டர் மற்றும் பவர் டிரில்லர் ஆகியவற்றால் இயக்கப்படும் வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள், தென்னை மரமேறும் கருவி, நேரடி நெல் விதைப்பு கருவி வழங்கப்பட உள்ளது. சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50சதவீதம் வரையிலும் இதர விவசாயிகளுக்கு 40சதவீதம் வரையும் அல்லது

அரசால் நிர்ணயிக்கப்பட்ட மானியத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.